8. **Earnings per equity share** (of Rs. 10/- each) for continuing and discontinued operations						
(i) Basic	**35.13**	32.78	31.76	**67.94**	62.11	125.43
(ii) Diluted	**35.13**	32.78	31.76	**67.94**	62.11	125.43

The information on standalone financial results is given below : *(Amount in Million Rs. except per share details)*

Particulars	STANDALONE					
	3 Months Ended September 30, 2026	3 Months Ended June 30, 2026	3 Months Ended September 30, 2025	Period Ended September 30, 2026	Period Ended September 30, 2025	Year Ended March 31, 2026
	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited
1. Total Income from operations	**10,500**	9,627	8,979	**20,127**	17,601	36,261
2. Net Profit /(loss) for the period (before tax and exceptional items)	**1,588**	1,507	1,798	**3,095**	3,541	7,055
3. Net Profit /(loss) for the period before tax (after exceptional items)	**1,588**	1,507	1,798	**3,095**	3,541	6,818
4. Net Profit /(loss) for the period after tax (after exceptional items)	**1,189**	1,119	1,339	**2,308**	2,637	5,137
5. Total comprehensive Income for the period [Comprising profit/(loss) for the period (after tax) and other comprehensive income (after tax)]	**1,203**	1,142	1,337	**2,345**	2,602	5,171
6. Paid up equity share capital (Face value of Rs. 10/- each)	**464**	440	440	**464**	440	440
7. Other equity (excluding revaluation reserves)	**NA**	NA	NA	**NA**	NA	28,284
8. **Earnings per equity share** (of Rs. 10/- each) for continuing and discontinued operations						
(i) Basic	**26.34**	25.40	30.40	**51.77**	59.87	116.60
(ii) Diluted	**26.34**	25.40	30.40	**51.77**	59.87	116.60

Notes :-
1. The above is an extract of the detailed format of quarterly and six months ended ended Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the quarterly and six months ended Financial Results is available on the website of the stock exchanges i.e. NSE (www.nseindia.com) & BSE (www.bseindia.com) and company's website (www.shrirampistons.com).
2 The above unaudited results were reviewed and recommended by Audit Committee in its meeting held on October 30, 2026 and taken on record by Board of Directors in its meeting held on October 30, 2026.

SCAN ME

For and on behalf of the Board of Directors
Sd./-
(KRISHNAKUMAR SRINIVASAN)
MANAGING DIRECTOR & CEO
Sd./-
(PREM PRAKASH RATHI)
CHIEF FINANCIAL OFFICER

Place : Coimbatore
Date : October 30, 2026

மனைவியை அடித்துக் கொன்று உடலை எரித்த கணவர் கைது

மாமனாருக்கு வலைவீச்சு

சிதம்பரம், அக்.31—

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள மீதிகுடி கிராமத்தைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (வயது34). பெயிண்டர்.

காதல் திருமணம்

இவர், சிவகாமி (30) என்பவரை கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு இடையே கடந்த 2 ஆண்டுகளாக அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. பின்னர் இருவரும் சமாதானமாகி ஒன்றாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மதியம் கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. அப்போது ஆத்திரமடைந்த ரவிச்சந்திரன், மனைவி சிவகாமியை கடுமையாக தாக்கியுள்ளார்.

அடித்து கொலை

இதில் பலத்த காயம் அடைந்த சிவகாமி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். அவர் இறந்ததற்கான எந்த தடயமும் வீட்டில் இல்லாதபடி ரவிச்சந்திரன் பார்த்து கொண்டார். வீட்டில் ஆங்காங்கே படிந்திருந்த ரத்தக்கறை எல்லாவற்றையும் அவர் அழித்து விட்டதாக கூறப்படுகிறது.



கொலை செய்யப்பட்ட சிவகாமி.

தனது மனைவி இறந்த தகவலை அக்கம்பக்கத்தினருக்கோ, கிராம மக்களுக்கோ தெரிவிக்காமல், யாருக்கும் தெரியாமல், இரவு நேரத்தில் வாகனம் ஒன்றை வரவழைத்து சிவகாமியின் உடலை சுடுகாட்டிற்கு கொண்டு சென்றுள்ளார்.

உடல் எரிப்பு

பின்னர் அங்கு வைத்து யாருக்கும் தெரியாமல் உடலை எரித்துள்ளனர். இந்த நிலையில், சுடுகாட்டில் பிணம் எரிவதை பார்த்த அப்பகுதி மக்கள், இங்கு எந்தஇறப்பும்நடக்கவில்லை. பின்னர் எப்படி சுடுகாட்டில் பிணம் எரியூட்டப்படுகிறது என சந்தேகம் அடைந்தனர்.

உடனடியாக அவர்கள் சம்பவம் குறித்து கிராம உதவியாளருக்கு தகவல் கொடுத்தனர். அவர் உடனடியாக தாசில்தாருக்கு இந்த தகவலை தெரிவிக்க, அவர் சம்பவம் குறித்து அண்ணாமலை நகர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

இதையடுத்து சிதம்பரம் துணை போலீஸ் சூப்பிரண்டு சத்திரிய கவின், அண்ணாமலை நகர் இன்ஸ்பெக்டர் கவிதா தலைமையிலான போலீசார் நள்ளிரவு சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

கணவர் கைது

விசாரணையில் ரவிச்சந்திரன் குடும்பத் தகராறில் தனது மனைவியை அடித்து கொலை செய்ததும், யாருக்கும் தெரியாமல் உடலை சுடுகாட்டிற்கு எடுத்து சென்று எரித்ததும் தெரியவந்தது. மேலும், உடலை எரிக்க ரவிசந்திரனின் தந்தை தனது விறகு கடையில் இருந்து விறகு எடுத்து வந்து கொடுத்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதையடுத்து போலீசார் ரவிசந்திரன் மற்றும் அவரது தந்தையை தேடினர். ஆனால் அவர்கள் தலைமறைவாகி விட்டனர். அவர்களது செல்போன் எண்ணும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது.

தொடர்ந்து அவர்கள் 2 பேரையும் போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் ரவிச்சந்திரனை போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து தலைமறைவாக உள்ள ரவிச்சந்திரனின் தந்தையை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், உடல் நலக்குறைவால் வீட்டில் ஓய்வில் இருக்கும் முன்னாள் முதல்—அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

விழுப்புரம் வீடியோ வைரலான விவகாரம்

கொலை மிரட்டல் விடுத்த கால்நடை உதவி மருத்துவர் பணி இடைநீக்கம்

அமைச்சர் கமலி அதிரடி உத்தரவு

ராசிபுரம், அக்.31—

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்த கூனிமேடு பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு சென்ற ஒருவர் டாக்டர் பணி நேரம் குறித்து விசாரித்ததாக தெரிகிறது. அப்போது அவரை அங்கு பணியில் இருந்த உதவி டாக்டர் சங்கரநாராயணன் தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

பணி இடைநீக்கம்

அந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்த நிலையில் புகாருக்கு உள்ளான கால்நடை உதவி டாக்டர் சங்கரநாராயணன் பணி இடைநீக்கம் செய்து கால்நடைத்துறை அமைச்சர் கமலி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து ராசிபுரத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த கால்நடைத்துறை அமைச்சர் கமலி கூறியதாவது:—

பாதிக்கப்பட்ட நபர் நேரடியாக தன்னை தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தார். மேலும் வீடியோவை எனது செல்போனிற்கு அனுப்பி வைத்திருந்தார். அதன் உண்மைதன்மை குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டேன். விசாரணையில் சம்பவம் உண்மை என்பது தெரியவந்தது.

மன்னிப்பு

இதையடுத்து உதவி டாக்டர் சங்கரநாராயணனை பணி இடைநீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் துறை சார்ந்த அமைச்சர் என்ற முறையில் பாதிக்கப்பட்டவரிடம் மன்னிப்புகேட்டுகொள்கிறேன். பொதுமக்களிடம் டாக்டர்கள் கனிவாக பேச வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தருமபுரி அருகே

இரும்பு ராடால் தாயை அடித்துக் கொலை செய்த மகன் கைது

சமூக வலைதளங்களில் வீடியோ வைரல்

தர்மபுரி, அக்.31—

தருமபுரி மாவட்டம் பழைய இண்டூர் பகுதியை சேர்ந்தவர் சித்தன், இவருடைய மனைவி சின்ன பாப்பா (வயது45). இவர்களது மகன் தேவராஜ் (20), கட்டிட தொழிலாளி. இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்து வந்தது. கடந்த ஆகஸ்டு மாதம் 3—ந்தேதி இண்டூரில் போலீஸ் தொப்பியை அணிந்து கொண்டு கையில் கத்தியுடன் சாலையில் சென்ற பொதுமக்களை விரட்டிய தேவராஜ், வீரமணி என்பவரை தாக்க முயன்றார்.

இது தொடர்பான புகாரின் பேரில் தேவராஜை இண்டூர் போலீசார் கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். கடந்த 28—ந்தேதி இவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. இதனால் சிறை யில் இருந்து தேவராஜ் வெளியே வந்தார். நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டில் இருந்த தேவராஜிடம், அதிக செலவு செய்து உன்னை ஜாமீனில் எடுத்துள்ளோம். எனவே இனிமேல் எந்த பிரச்சினையும் செய்யாமல் வேலைக்கு செல்லுமாறு அவரது தாயார் சின்னபாப்பா அறிவுரை கூறியுள்ளார்.



தேவராஜ், சின்னபாப்பா.

அடித்துக்கொலை

இதனால் ஆத்திரமடைந்த தேவராஜ் தன்னை எதிர்த்து யாரும் பேசக்கூடாது என்று கூறி தனது தாயாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் வீட்டின் கதவை உள்பக்கமாக பூட்டி கொண்டு தாயார் சின்னபாப்பாவை இரும்பு ராடால் அடித்தார். இதில் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்த சின்ன பாப்பா பரிதாபமாக உயிரிழந்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் இது பற்றி இண்டூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் சின்னபாப்பாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து தேவராஜை நேற்று கைது செய்தனர்.

கதவு துவாரத்தில் பதிவான வீடியோ!

சின்னபாப்பாவின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அவரது வீட்டின் முன்பு திரண்டனர். நீண்ட நேரமாக கதவைத் தட்டியும் திறக்கப்படாததால் சந்தேகமடைந்த அவர்கள், கதவில் இருந்த துவாரம் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தனர்.

அப்போது சின்னபாப்பா கீழே சடலமாகக் கிடந்ததையும், அருகில் சட்டை அணியாமல் கையில் ரத்தக்கறை படிந்த இரும்பு ராடுடன் தேவராஜ் நின்று கொண்டிருந்ததையும் கண்டு அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.மேலும், கதவின் துவாரம் வழியாக உள்ளே பார்த்தபோது தேவராஜ் நின்றிருந்த காட்சியை அங்கிருந்த சிலர் செல்போனில் வீடியோவாகப் பதிவு செய்துள்ளனர். தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

தமிழர் பிரதமர் ஆவார் என்ற கருத்து

ராகுல்காந்தியும் தமிழர் தான், அவர்தான் பிரதமர் ஆவார்

திருநாவுக்கரசர் சொல்கிறார்

சென்னை, அக்.31—

இந்திய துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று தமிழகத்திற்கு வந்திருந்தார். அப்போது, தமிழரும் பிரதமர் ஆகலாம் என்ற கருத்தை தெரிவித்தார். இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி, இன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் முன்னாள் மத்திய மந்திரி திருநாவுக்கரசரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அவர் கூறியதாவது:—

தமிழ்நாட்டில் இருந்து இதுவரை பிரதமராக யாரும் வந்ததில்லை. இப்போதைக்கு அதற்கான வாய்ப்பும் யாருக்கும் இல்லை. இதுதான் யதார்த்தம். முதல்—அமைச்சர் விஜய் பிரதமர் ஆவாரா என்கிறீர்கள். எங்களை பொறுத்தவரை ராகுல் காந்தி தான் பிரதமர் வேட்பாளர்.

முதல்—அமைச்சர் விஜய் பிரதமர் வேட்பாளர் என்பது மகா, மகா கற்பனை. அந்த கட்சியில் சிலர் ஆர்வத்தின் காரணமாக அப்படி கூறினார்கள். மூத்த அமைச்சர் ஒருவரே அதற்கு விளக்கம் அளித்து விட்டார். அதன்பிறகு யாரும் அப்படி பேசவில்லை. ராகுல் காந்தியின் தந்தை ராஜீவ்காந்தி தமிழகத்தில் ரத்தம் சிந்தி உள்ளார். எனவே அவரும் தமிழர் தான். அந்தவகையில் ராகுல் தான் பிரதமராக வருவார்.

நாளை டெல்லியில் காங்கிரஸ் நடத்தும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் மோடி அரசுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி வைத்தியமாக அமையும்.

ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் டெல்லிக்கு சென்று கொண்டு இருக்கிறார்கள். இந்தியா கூட்டணியில் இருக்கும் த.வெ.க. உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. யார், யார் கலந்து கொள்வார்கள் என்பது நாளை தான் தெரியவரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 42—வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சத்தியமூர்த்தி பவனில் அவரது படத்திற்கும், வால்டாக்ஸ் சாலையில் உள்ள அவரது சிலைக்கும், முன்னாள் மத்திய மந்திரி திருநாவுக்கரசர் தலைமையில் காங்கிரஸ் நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். தொடர்ந்து, பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும், சுதந்திர போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் படேல் 151—வது பிறந்த நாளையொட்டி அவரது படத்திற்கும் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், காங்கிரஸ் துணைத் தலைவர் சொர்ணா சேதுராமன், பொதுச் செயலாளர்கள் எஸ்.ஏ.வாசு, தணிகாசலம், அருள் பெத்தையா, மாவட்ட தலைவர் கராத்தே செல்வம், அரும்பாக்கம் வீரபாண்டியன், மாநில செயலாளர்கள் சுரேஷ் பாபு, அகரம் கோபி, தமிழ்ச்செல்வன், கடல் தமிழ்வாணன், மற்றும் சரஸ்வதி நாலடியார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சத்தியமூர்த்திபவனில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நினைவு நாள் மற்றும் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்தநாளை முன்னிட்டு அவர்களது உருவ படத்திற்கு முன்னாள் மாநில தலைவர் திருநாவுக்கரசர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பேரணாம்பட்டு அருகே

மாயமான மாணவிகள் 2 பேர் சென்னையில் மீட்பு

வேலூர், அக்.31—

வேலூர் மாவட்டம், பேரணாம் பட்டு பகுதியில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி உள்ளது.

மாணவிகள் மாயம்

அங்கு பத்தலப்பல்லி கிராமத்தை சேர்ந்த 16 வயது மாணவி பிளஸ்—1 படித்து வருகிறார். மாலை பள்ளி முடிந்ததும் வீடு திரும்பாத நிலையில் அதிர்ச்சி அடைந்த பெற்றோர், உடனே மகளுடன் படிக்கும் சக தோழியான சின்னவரிக்கம் கிராமத்தை சேர்ந்த பிளஸ்—1 மாணவியின் தாயாரை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் உங்கள் மகளும், எனது மகளும் பள்ளிக்கு வரவில்லை என்று பள்ளியில் இருந்து போனில் தெரிவித்ததாகவும், எனது மகள் வீட்டில் இருந்த செல்போனை எடுத்து சென்று விட்டதாகவும் தெரிவித்தார்.

ஒரே நேரத்தில் பிளஸ்—1 மாணவிகள் 2 பேர் மாயமானதால் அவர்களை உறவினர்கள் மற்றும் தோழிகள் என பல்வேறு இடங்களில் தேடியும் அவர் கிடைக்கவில்லை. இதையடுத்து, மாணவிகளின் பெற்றோர் பேரணாம்பட்டு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவி எடுத்துச் சென்றுள்ள செல்போன் பதிவுகளை ஆய்வு செய்து தேடி வந்தனர். ஒரே பள்ளியில் பிளஸ்—1 படிக்கும் 2 மாணவிகள் திடீரென காணாமல் போன சம்பவம் அந்த பகுதியிலும், பள்ளியிலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னையில் மீட்பு

இந்த நிலையில் சென்னை கீழ்பாக்கம் பகுதியில் நின்ற 2 மாணவிகளையும் சென்னை போலீசார் மீட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தினர். மேலும் இதுகுறித்து பேரணாம்பட்டு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். மாணவிகளை மீட்பதற்காக பேரணாம்பட்டு போலீசார் சென்னை புறப்பட்டு சென்றனர்.

நாகை அருகே விபத்து:

கார்-லாரி நேருக்கு நேர் மோதியதில் போலீஸ்காரர் பலி

பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு திரும்பிய போது பரிதாபம்

நாகப்பட்டினம், அக்.31—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே கீழப்பனையூர் கிராமத்தை சேர்ந்தவர் முருகப்பா. இவரது மகன் ஜனார்த்தனன். போலீஸ்காரரான இவர் ராமநாதபுரத்தில் நேற்று நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில் பாதுகாப்பு பணிக்காக சென்றிருந்தார்.



ஜனார்த்தனன்.

பின்னர், பணியை முடித்துவிட்டு போலீஸ் வாகனத்தில் நாகைக்கு திரும்பி கொண்டிருந்தார். அதேவேளையில், வாஞ்சூரில் இருந்து அரியலூர் நோக்கி கரி ஏற்றிக் கொண்டு ஒரு லாரி சென்று கொண்டிருந்தது. திருக்கண்ணங்குடி ஆர்ச் அருகில் நாகப்பட்டினம்— திருவாரூர் தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்த போது திடீரென எதிரே வந்த லாரியும்— போலீஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதில் போலீஸ் காரர் ஜனார்த்தனன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கீழ்வேளூர் போலீசார் ஜனார்த்தனன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஒரத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



விலைவாசி உயர்வை கண்டித்து

காய்கறி மாலைகளை கழுத்தில் அணிந்து கம்யூனிஸ்டு நூதனப் போராட்டம்

சென்னை, அக்.31—

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் பாரிமுனை குறலகம் அருகில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விலைவாசி உயர்வு மற்றும் அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற அத்தியா வசிய பொருட்கள் தட்டுப்பாடு பதுக்கலுக்கு காரணமானவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்த போராட்டம் நடந்தது. மத்திய சென்னை மாவட்ட செயலாளர் செல்வா தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய குழு உறுப்பினர் கே.பாலபாரதி கலந்து கொண்டார். மேலும் துறை முகம் பகுதி செயலாளர் ஆர்.குமார், வியாபாரிகள் சங்கத் தலைவர் எம்.டி.கிருஷ்ணன் உள்ளிட்ட 100—க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். விலைவாசி உயர்வுக்கு காரணமான மாநில அரசின் தவறான போக்கை கண்டித்து கோஷங்களை எழுப்பினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது போராட்டக்காரர்கள் கழுத்தில் காய்கறி மாலைகளை அணிந்து நூதன முறையில் அரசுக்கு தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

அல்டிஜி டெக் லிமிடெட்

alldigi tech — A digitide company

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: தரைத்தளம் (பிளாக் 9A - 9B) மற்றும் முதல் தளம் (பிளாக் 9B), 1/124 சிவாஜி கார்டன்ஸ், DLF சைபர் சிட்டி, மூன்லைட் ஸ்டாப், மணப்பாக்கம், சென்னை – 600089
தொலைபேசி: 044 4299 7070; CIN: L72300TN1998PLC041033
இணையதளம்: www.alldigitech.com மின்னஞ்சல்: investorcontact@alldigitech.com

30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதி முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்குக்கான வருவாய் தவிர, தொகைகள் லட்சம் ரூபாயில்)

எண்	விவரங்கள்	தொகுக்கப்பட்டு		
		முடிவடைந்த காலாண்டு 30.09.2026	முடிவடைந்த அரையாண்டு 30.09.2026	முடிவடைந்த காலாண்டு 30.09.2025
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	15,331	30,359	14,742
2	காலத்திற்கான நிகர லாபம் (வரி, விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண உருப்படிகளுக்கு முன்)	2,984	5,450	2,099
3	காலத்திற்கான நிகர லாபம் (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு, வரிக்கு முன்)	2,984	5,450	2,099
4	காலத்திற்கான நிகர லாபம் (விதிவிலக்கான மற்றும்/அல்லது அசாதாரண உருப்படிகளுக்குப் பிறகு, வரிக்குப் பின்)	2,658	4,470	1,762
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான லாபம் (வரிக்குப் பின்) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பின்) உட்பட]	2,808	4,783	1,902
6	பங்கு மூலதனம் (ஒவ்வொரு பங்கின் முகமதிப்பு ரூ.10/-)	1,524	1,524	1,524
7	தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள காப்புத் தொகைகள் (மதிப்பீட்டுக் காப்புத் தொகை நீங்கலாக) #	23,574	23,574	24,425
8	ஒரு பங்குக்கான வருவாய்★ (ஒவ்வொரு பங்கின் முகமதிப்பு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு): (அ) அடிப்படை;	17.44	29.33	11.56
	(ஆ) நீர்த்த	17.44	29.33	11.56

30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான இருப்புத் தொகை, 31 மார்ச் 2026 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின்படி உள்ள தொகையாகும். 30 செப்டம்பர் 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான இருப்புத் தொகை, 31 மார்ச் 2025 அன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின்படி உள்ள தொகையாகும்; இது SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் படி உள்ளது.

★ 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கும், 30 செப்டம்பர் 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கும் ஒரு பங்குக்கான வருவாய் (EPS) ஆண்டு அடிப்படையில் கணக்கிடப்படவில்லை.

குறிப்புகள்:

1. இந்த நிதி முடிவுகள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 133-ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகள் (Ind AS) மற்றும் அதனுடன் தொடர்புடைய விதிகள், மேலும் SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் விதிமுறை 33 ஆகியவற்றின்படி தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட முடிவுகள், 29 அக்டோபர் 2026 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழு மற்றும் இயக்குநர்கள் குழுவின் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டன. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் இந்த முடிவுகள் குறித்து மாற்றமற்ற மதிப்பாய்வு அறிக்கையை வழங்கியுள்ளனர்.
2. 02 ஆகஸ்ட் 2024 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் 25வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்கள் அளித்த ஒப்புதலைத் தொடர்ந்து, நிறுவனத்தின் பெயர் "Alldigi Tech Limited" என மாற்றப்பட்டது. இதற்கிணங்க, நிறுவனப் பதிவாளர் 06 செப்டம்பர் 2024 அன்று புதிய நிறுவன இணைப்புச் சான்றிதழை வழங்கினார்.
3. ஒருங்கிணைந்த முடிவுகளில், நிறுவனத்தின் முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனங்களான Alldigi Tech Inc., USA (முன்னர் "Allsectech Inc." என அறியப்பட்டது) மற்றும் Alldigi Tech Manila Inc., Philippines (முன்னர் "Allsectech Manila Inc." என அறியப்பட்டது) ஆகியவற்றின் முடிவுகளும் அடங்கும்.
4. 21 நவம்பர் 2025 அன்று, இந்திய அரசு ஊதியக் குறியீடு, 2019; தொழில்துறை உறவுகள் குறியீடு, 2020; சமூகப் பாதுகாப்புக் குறியீடு, 2020; மற்றும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் குறியீடு, 2020 (ஒட்டுமொத்தமாக 'தொழிலாளர்' ஆகியவற்றின் விதிகளை அறிவித்தது. இவை, பணிக்காலத்திலும் பணிக்குப் பிந்தைய காலத்திலும் ஊழியர் நலன்களை நிர்வகிக்கும் 29 ஏற்கனவே நடைமுறையிலிருந்த தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைந்த கட்டமைப்பாக இணைக்கின்றன. இக்குறியீடுகள், பிற அம்சங்களுடன், ஊதியத்திற்கான ஒரே மாதிரியான வரையறை மற்றும் விடுப்பு தொடர்பான மேம்படுத்தப்பட்ட பலன்கள் உள்ளிட்ட மாற்றங்களை அறிமுகப்படுத்துகின்றன.
5. தொழிலாளர் குறியீடுகள் தொடர்பான முன்னேற்றங்களை நிறுவனம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. ஊழியர் நலன்கள் தொடர்பான பொறுப்புத் தொகையின் அளவீட்டில் ஏதேனும் தாக்கம் இருந்தால், அதை நிறுவனம் மதிப்பீடு செய்யும்.

தனித்த நிதி முடிவுகள்	முடிவடைந்த காலாண்டு 30.09.2026	முடிவடைந்த அரையாண்டு 30.09.2026	முடிவடைந்த காலாண்டு 30.09.2025
விவரங்கள்	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது
(அ) செயல்பாடுகளிலிருந்து வருமானம் (நிகர)	8,836	17,326	8,726
(ஆ) வரிக்கு முந்தைய லாபம்	1,498	4,839	1,234
(இ) வரிக்குப் பிந்தைய லாபம்	1,105	4,061	1,053
(ஈ) காலத்திற்கான பிற விரிவான வருமானம், வரி நீங்கலாக	145	253	(1)
(உ) காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்	1,250	4,314	1,052

6. 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாத காலத்தில், குழுமம் தனது துணை நிறுவனங்களில் ஒன்றுடன் தொடர்புடைய முன்கொண்டு வரப்பட்ட இழப்புகளுக்காக இதுவரை அங்கீகரிக்கப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை (DTA) மறுமதிப்பீடு செய்து, Ind AS - 34-க்கு இணங்க மொத்தம் ரூ.281 லட்சம் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை அங்கீகரித்தது.
7. 29 அக்டோபர் 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இயக்குநர்கள் குழு, தலா ரூ.10 முகமதிப்புடைய அதிகபட்சம் 4,80,000 பங்கு மூலதனப் பங்குகளை (மொத்த பங்கு எண்ணிக்கையில் 3.15%) ஒவ்வொரு பங்குக்கும் ரூ.1,000 என்ற விலையில், மொத்தம் ரூ.48,00,00,000-ஐ (நாற்பத்தெட்டு கோடி ரூபாய் மட்டும்) மிகாத தொகைக்கு மீண்டும் வாங்க ஒப்புதல் அளித்தது ("பங்கு மீள்கொள்முதல்"). இந்த, சிறப்புத் தீர்மானத்தின் மூலம் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு, டெண்டர் ஆஃபர் முறையில் தற்போதைய பங்குதாரர்களிடமிருந்து அவர்களுடைய பங்குதாரர் விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ளப்படும். நிறுவனங்கள் சட்டம், 2013 மற்றும் இந்திய பங்குச் சந்தை மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பத்திரங்கள் மீள்கொள்முதல்) ஒழுங்குமுறைகள், 2018 (திருத்தங்களுடன்), மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள பிற பொருந்தக்கூடிய சட்டங்களின் விதிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகிறது.
8. மேற்கண்டவை, SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015-ன் விதிமுறை 33-ன் கீழ் பங்குச் சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான விரிவான நிதி முடிவுகளின் சுருக்கமாகும். 30 செப்டம்பர் 2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளின் முழு விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்தின் முதலீட்டாளர் பிரிவில் (www.alldigitech.com) அல்லது BSE (www.bseindia.com) அல்லது NSE (www.nseindia.com) இணையதளங்களில் கிடைக்கும்.

நிதி முடிவுகளைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இடம்: பெங்களூரு
தேதி: 29 அக்டோபர் 2026

இயக்குநர்கள் குழுவின் சார்பாக
அல்டிஜி டெக் லிமிடெட்
ஒப்பம்/-
அஜித் ஐசக்
தலைவர்
DIN: 00087168

கன்சாலிடேட்டட் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சார்ட்டியம் லிமிடெட்

CONSOLIDATED CONSTRUCTION CONSORTIUM LTD

பதிவு அலுவலகம் : எண்.8/33, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் காலனி, கோபாலபுரம், சென்னை - 600 086
ஈ-மெயில் : secl@ccclindia.com, தொலைபேசி: 044-2345 4514 CIN: L45201TN1997PLC038610

30.09.2026 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான விரிவான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி

(₹ லட்சத்தில்)

வ.எண்.	விபரங்கள்	முடிவு அடைந்த மூன்று மாதங்கள் 30.09.2026	முந்தைய முடிவடைந்த மூன்று மாதங்கள் 30.06.2026	தொடர்புடைய முந்தைய வருடம் முடிவடைந்த மூன்று மாதங்கள் 30.09.2025	நிதி ஆண்டு முடிவு அடைந்தது 31.03.2026
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் வருமானம்	12,634.04	12,026.73	6,606.08	29,470.78
2.	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	-1268.47	-649.85	-42.70	9,978.01
3.	இக்காலத்திற்கான வரிக்குப்பின் நிகர லாபம் / (நஷ்டம்)	-1268.47	-549.83	-42.70	9,992.09
4.	மொத்த விரிவான வருமானம் (வரிக்குபின்)	-1268.74	-550.70	-89.56	9,994.89
5.	சமபங்கு மூலதனம்	8935.19	8,935.19	8,935.19	8,935.19
6.	பங்கு விகித ஈட்டுத்தொகை (EPS) ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை (₹ 2/- ஒரு பங்கிற்கு) -				
	அ) அடிப்படை	-0.28	-0.12	-0.01	2.24
	ஆ) குறைமதிப்பு	-0.28	-0.12	-0.01	2.24

1. மேற்கூறிய நிதிநிலை முடிவுகள் அக்டோபர் 29, 2026 அன்று நடத்த குழுக்கூட்டத்தில் இயக்குனர் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள், அக்டோபர் 29, 2026 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் குறித்த செப்டம்பர் 30, 2026 தேதியிட்ட அறிக்கையில் மாற்றியமைக்கப்பட்டகருத்தை வெளியிட்டுள்ளனர்.
3. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015ம் வருட இந்திய SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) விதிமுறைகளில் 33வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அக்டோபர் 29, 2026தணிக்கை செய்யப்படாத காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் குறித்த தேர்ந்தெடுக்கப்பட்ட விவரங்கள் ஆகும். முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு வடிவமும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com, www.nseindia.com என்ற இணையதளங்களிலும் கம்பெனியின் www.ccclindia.com_ இணையதளத்திலும் காணலாம்.

இடம் : சென்னை
தேதி : 29.10.2026

கன்சாலிடேட்டட் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சார்ட்டியம் லிமிடெட்-க்காக
எஸ். சிவராமகிருஷ்ணன்
துணை தலைவர்